# அறத்தால் விளைந்தது



மாசிலாமணி நந்தன்

# 48. காம்கேர் கே. புவனேஸ்வரி



ஒரு பெண்கள் பத்திரிகையில் அவரின் கட்டுரை படிக்கிறேன், நன்றாக இருந்தது. அவரிடம் சென்று புத்தகம் எழுதச் சொல்லலாம் என்று முடிவு செய்து அவரைப் பார்க்கப் போகிறேன்.

மலேசிய பிரதமர் மஹாதிர் முகம்மது வாழ்க்கை வரலாறு படித்திருக்கிறேன். அவர் சொல்வார், தனது எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அவர் மனைவியை அழைத்துச் செல்வார். பல பிரச்சினைகள் வராது.

அவர் சின்னப் பெண். அதனால் நான் என் மனைவியையும் உடன் அழைத்துச் சென்று பார்த்தேன். அப்போது எல்லாம் அறிமுகம் இல்லாத பெண்களைப் பார்க்கத் தனியாகச் செல்ல மாட்டேன். மனைவியை அழைத்துச் செல்வேன். நான் யதார்த்தமாகப் பேச அவர்கள் தப்பாகப் புரிந்துகொண்டுவிடக் கூடாது என்று எண்ணம்தான்.

புத்தகம் வெளியிட்டோம். மலேசியாவிற்குப் புத்தகம் அனுப்ப ஆள்களை அனுப்பி உதவினார். அவரும் மலேசியா செல்ல வேண்டியது, எப்படியோ தள்ளிப் போய்விட்டது.

கம்ப்யூட்டர் பற்றி நிறைய சந்தேகம் கேட்பேன். பொறுமையாகப் பதில் சொல்வார். சென்ற மாதம்கூட சந்தேகம் ஒன்று கேட்டேன்.

அவர் ஓர் ஆவணப் படம் எடுக்கும்போது அப்பாவைத்தான் முதலில் எடுத்தார். அப்பா சொன்னார்கள், நன்றி உணர்ச்சி உள்ளவர்கள். எனக்கு உடன் புரியவில்லை.

பின் சென்ற ஆண்டு வந்தார்கள், முதல் புத்தகம், உங்கள் இடத்தில். படம் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். வந்தார்கள், “சார் நீங்களும் நானும் புத்தகத்துடன் படம் எடுக்கலாம்” என்று சொல்லிப் படம் எடுத்தார்கள்.

சுயமாக உழைத்து வாழும் சிறந்த பெண்மணி. மேலும் பெரிய அளவில் வருவார்.

# 49. பகவத் கீதை




கும்பகோணம் மாமா வீட்டில் இந்தப் புத்தகம் பார்த்தேன். எடுத்துப் புரட்டினேன். அட, நமக்கான புத்தகம் என்று சென்னை வந்து வாங்கினேன். 1094 பக்கங்கள். தினம் மூன்று பக்கங்கள் என்று முடித்தேன். குறிப்புகள் எடுத்தேன்.

இந்த விடுமுறையில். இதை ஒரு புத்தகமாக எழுதிவிடலாம் என்று நினைத்துதான் எடுத்தேன், ஒன்றும் ஓடவில்லை.

இரண்டு விஷயங்கள் விஸ்வரூப தரிசனம் கண்டவர்கள்,